[30th September 1958

Transfer of Military Units from the Fort St. George

* 643 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை கோட்டையில் இருந்து வரும் ராணுவப் படைகளை அங்கிருந்து காலி செய்து அதிக இடவசதி இருக்கும் ஆவடியிலும், பறங்கிமலையிலும் குடியேறச் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காருக்குச் சென்னை சர்க்கார் கடிதப் போக்குவரத்துக்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்களா ?

(ஆ) அவ்வாறு இருப்பின், சென்னை சர்க்காரின் இவ்வாலோசனைகளை இந்திய கவர்மெண்டார் ஏற்றுக்கொண்டார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Employment Exchange

* 644 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) எம்பளாய்மெண்டு எக்ஸ்சேஞ் போர்டில் பதிவு செய்யும் ஆட்களை முறையாக வேலைக்கு அனுப்புகிறார்களா ?

(ஆ) அப்படி செய்கிறார்களா, இல்லையா என்பதைப்பற்றி செக்கப் செய்யப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Submissions against notified vacancies are made according to the priority to which the candidates belong. Candidates not belonging to priority categories are submitted strictly according to the seniority in registration except when special qualifications are prescribed by employers.

(*b*) Yes, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு உத்தியோகத்திற்கு ஒரு ஆள் தேவை என்று சொன்னால் எட்டு, பத்து பேர்கள் அனுப்பப் படுகிறார்கள். இதற்கு காரணம் என்ன ? அப்படியில்லாமல் ஒரு வேலைக்கு ஒரு ஆளை மட்டிலும் அனுப்ப சர்க்கார் உத்தரவிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு குறிப்பிட்ட வேலைக்குள்ள தகுதி எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றி " எம்பளாய் மெண்ட் எக்ஸ்சேன்ஞ் " க்கு நிர்ணயம் செய்ய முடியாது. ஆகவே ஒருவருக்கு மேல் அனுப்புகிறார்கள், சில சமயங்களில்.

SRI N. MARUDACHALAM : " எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஞ் " ஆபீஸில் வேலையில்லாமல் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ? எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : தனி கேள்வி வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஞ் போர்டில் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ரென்யூ செய்கிற நிலை இருப்பதால் அந்நிலையில் அதை மறந்துவிடக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஒருமுறை அவர்கள் பதிவு செய்கிறார்கள் என்று சொன்னால் அதுவே போதுமானதல்லவா ? அப்படி ஒரு ஏற்பாட்டை சர்க்கார் செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு முறை பதிவு செய்துவிட்டால், நாலு மாதத்திற்கு பிறகு அவர்கள் இன்னும் வேலை யில்லாமல் இருக்கிறார்களா என்று தெரியாது. பேர் அனுப்பினால் தகவல் இல்லாமலே போய் விடுகிறது. ஆகவேதான் ரென்யூ செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.